DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 244 / 2018
Deposition of PW4 / LW13

| | | |
|---|---|---|
| Name | : | திரு. குணசேகரன் |
| Father's / Husband Name | : | வேலுச்சாமி |
| Village | : | பிச்சம்பட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.05.2026.

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**<u>அரசுத் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக முதல் விசாரணை :</u>**

1.) நான் தற்போது கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அழகிரிசாமி சார்பு ஆய்வாளர் பணி ஓய்வில் சென்றுள்ளபடியால் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் இந்த வழக்கின் கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன்.

2.) கடந்த 22.01.2018 ம் தேதி 21.00 மணிக்கு கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளர் அழகிரிசாமி நிலைய பொறுப்பில் இருந்த போது க.விலக்கு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று சிகிச்சையில் உள்நோயாளியாக இருந்த திருமதி.சத்தியா என்பவர் மயக்கநிலையில் இருந்ததால் அவரின் கணவர் கிருஷ்ணகுமார் கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பதிவு செய்து கடமலைக்குண்டு காவல் நிலையம் வந்து

கடமலைக்குண்டு காவல் நிலைய குற்ற எண். 46/2018 பிரிவுகள் 294(பி),324,506(2) இ.த.ச. மற்றும் 4 of TNPHW Act & 4(1)(j) TNP Act பிரகாரம் வழக்கு பதிவுசெய்துள்ளார். **இந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 .**

3.) 22.01.2018 ம் தேதி எதிரியை தங்கம்மாள்புரம் பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது செய்து கனம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். 23.01.2018 ம் தேதி காலை 8.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான பழனிச்சாமி மற்றும் சதுரகிரி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 .**

4.) சாட்சிகள் 1 கிருஷ்ணகுமார், 2 கிருஷ்ணசாமி, 3 ஜெயராஜ், 4 பெருமாள், 5 தனலட்சுமி, 6 சத்தியா மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் தனித்தனியே பதிவு செய்துள்ளார். பின்பு 07.06.2018 ம் தேதி வழக்கில் காயம் பட்ட சத்தியா என்பவருக்கு சிகிச்சை செய்த க.விலக்கு மருத்துவர்கள் கௌதம்ராஜ் மற்றும் துளசி சங்கமித்ரா வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று கிடைக்கப் பெற்றுள்ளார். **சத்தியா என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7.** அன்றைய தினமே இரண்டாம் நிலைக் காவலர் திரு.அசோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 07.06.2018 ம் தேதி அனைத்து விசாரணைகளையும் முடித்து எதிரி மீது மேற்கண்ட அதே குற்ற பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதியிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு எதிரியின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் குறித்த சாட்சிகளின் முன்னிலையில் கைது செய்யாமல் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து கைது செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. சத்தியா என்பவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும்

தொடர்பில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல .

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.05.22 13:13:25 +0530

Judicial Magistrate,
Andipatti.